Registered as a Newspaper
பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 83

சனிக்கிழமை
17 பெப்ரவரி 2024

மாசி 05 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"சூறாவளி அடிச்சமாதிரி வடக்கில இவர் சுழண்டடிக்கிறதைப் பார்க்க சீனாவுக்கு ஏதோ சிக்கல் குடுக்கிற மாதிரி இருக்குது பாருங்கோ"

## சிறுமிக்கு நீதிகோரி மாணவர்கள் போர்!



மன்னார், பெப். 17
தலைமன்னாரில் பத்துவயதுச் சிறுமி ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்ட நிலையில் அவருக்கு நீதிகோரி தலைமன்னாரில் நேற்றுக்காலை ஆர்ப்பாட்டம் 11

தென்னந்தோப்பில் -



## பத்துவயதுப் பாலகி சடலமாக மீட்பு

### தலைமன்னாரில் பயங்கரம்

**மன்னார், பெப்ரவரி 17**

**மன்னார் - தலைமன்னார் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை காணாமற்போன 10 வயதுப் பாலகி ஒருவர் தென்னந் தோட்டமொன்றில் நேற்றுக்காலை சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. உடனடியாக விசாரணையில் இறங்கிய பொலிஸார் சில மணித்தியாலங்களுக்குள், கொலையாளி என்ற சந்தேகத்தில் ஒருவரைக் கைது செய்துள்ளனர். தலைமன்னார் கிராமத்தைச் சேர்ந்த கியான்சிக்கா (வயது -10) என்ற சிறுமியே இவ்வாறு உயிரற்ற உடலமாக மீட்கப்பட்டவராவார்.** 11

காணாமலாக்கப்பட்டோர் விவகாரம்:

## 90 பேருக்கு இழப்பீடு!

யாழ்ப்பாணம், பெப். 17
காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில் இதுவரை 90 பேருக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் கடந்த மாதம் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் இடம்பெற்றது. 11

வலிகாமம் வடக்கில் உள்ள

## காணிகளை அளவிட்டமை சுவீகரிப்பதற்காக இல்லை

யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 17
வலிகாமம் வடக்குப் பகுதியில், படையினரின் வசமிருந்து விடுவித்த காணிகளை அளவீடுசெய்வது சுவீகரிப்புக்காக இல்லை என்று யாழ்ப்பாணம் மாவட்டச்செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்தார். மயிலிட்டி தெற்கு ஜே/240, குரும்பசிட்டி ஜே/242, கட்டுவன் ஜே/238. 11

வவுனியாவில்

## குடும்பத்தலைவர் சடலமாக மீட்பு!

வவுனியா, பெப். 17
வவுனியா, வீரபுரம் பகுதியில் உள்ள கிணற்றுக்குள் இருந்து இளம் குடும்பத்தலைவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட் 11

## சஜித் அணியிலிருந்து பொன்சேகா நீக்கம்?



கொழும்பு, பெப். 17
ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியில் இருந்து அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா விரைவில் நீக்கப்படவுள்ளார் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.
கட்சித்தலைவரையும், கட்சியால் எடுக்கப்படும் முடிவுகளையும் 11

'13' தொடர்பில்

## இந்தியா 'கப்சிப்'!

அநுர ஆச்சரியம்



கொழும்பு, பெப். 17
அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் இந்தியத்தரப்பில் எதுவும் பேசப்பாடமை எமக்கு வியப்பாக இருந்தது - என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், 11

## இந்தியத் தூதர் சந்தோஷ் வடக்குக்கு நேற்றுப் பயணம்

யாழ்ப்பாணம், பெப். 17
இலங்கைக்கான இந்தியத் தூதர் சந்தோஷ் ஜா வடக்கு மாகாணத்தின் பலபகுதிகளுக்கும் நேற்றுப் பயணம் மேற்கொண்டார்.
யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த அவர், பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப் பலசுற்றுப் பேச்சுகளிலும் பங்கெடுத்தார். அத்துடன், நயினாதீவுக்குச் சென்ற இந்தியத்தூதுவர் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம், நயினாதீவு நாகவிகாரை என்பவற்றிலும் வழிபாட்டில் ஈடுபட்டார். அத்துடன் 11

யாழில் இரண்டு மாதங்களில்

## போதைப்பொருள் விவகாரம்: 250க்கும் மேற்பட்ட வழக்குகள்

யாழ்ப்பாணம், பெப். 17
யாழ்ப்பாணம் மாவட்டத்தில், கடந்த இரண்டு மாதங்களுக்குள் 250க்கும் மேற்பட்ட வழக்குகள் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்ற உறுப்பினர்களை ஓரம்கட்டும் அமைச்சர் டக்ளஸ்

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் காரசாரம்

**யாழ்ப்பாணம், பெப். 17**

**யாழ். மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதிக்கான திட்ட முன்மொழிவுகள் தொடர்பில் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடவில்லை எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனித்துச் செயற்படுகின்றார் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், பொ. கஜேந்திரகுமார், செ. கஜேந்திரன், இ.அங்கஜன் ஆகியோர் சுட்டிக்காட்டினர்.**

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதன்போது பன்முகப்படுத்த நிதி தொடர்பில் குழப்பம் ஏற்பட்டது.

"அனைத்து முடிவுகளையும் எடுத்துவிட்டு ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இறுதி அறிவிப்பை மேற்கொள்ள முடியாது" என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

"பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் சிலவற்றுக்கு மாத்திரமே எமக்கு அழைப்புக் கிடைத்தது" என்று நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் குறிப்பிட்டார்.

"எமது முன்மொழிவுகளையும் உள்ளடக்கியே இறுதிப்பட்டியல் தயாரிக்கப்படவேண்டும்" என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

"பன்முகப்படுத்தப்பட்ட நிதியாக மாவட்டத்துக்கு 322 மில்லியன் ரூபா கிடைத்தது. அது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டது. கிராம மட்டத்தில் தரவுகள் பெறப்பட்டு பிரதேச மட்டத்திலும் கலந்துரையாடப்பட்டன. உறுப்பினர்களுக்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் தொடர்பிலும் தகவல் வழங்கப்பட்டது" என மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், இங்கே முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளை நாம் ஏற்கவில்லை. எமது முன்மொழிவுகளையும் உள்ளெடுக்கவேண்டும். எனவே ஒரு வாரம் கழித்து அதை அனுப்புமாறு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவிடம் தெரிவித்தனர்.

"பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதிகளைக் கண்டிருந்தேன். அவர்களும் இங்கு சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள் தொடர்பாக கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர். இப்போது இந்த முன்மொழிவுகளை அனுப்புகிறேன். நீங்கள் அனைவரும் ஜனாதிபதியுடன் தனித்தனியாக தொடர்பை பேணுபவர்கள். பன்முகப்படுத்தப்பட்ட நிதியை உங்களுக்கு வழங்குமாறு அவரிடம் கேட்டுள்ளீர்கள். எனவே உங்கள் திட்டங்களை அவரிடம் நேரடியாகத் தெரிவியுங்கள்" என அமைச்சர் டக்ளஸ் குறிப்பிட்டார்.

இருப்பினும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் முன்மொழிவையும் இணைத்து அனுப்ப ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் இணங்கினார். (ஒ-125-26)

## அமைச்சர் ஜீவன் தொண்டமானுடன் கஜேந்திரகுமார், சுமந்திரன் வாதம்

"நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத்துறந்துவிட்டுநாடாளுமன்றத்தை கலைப்பது தொடர்பில் பேசுங்கள்" என அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்றுப் பங்கேற்ற போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மக்கள் ஆணை இல்லாதவர் என்று குறிப்பிட்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி ஒருவர் பதவிக் காலத்துக்கு முன்னர் அதிலிருந்து விலகினால் புதிய ஜனாதிபதி எப்படி தெரிவு செய்யப்படுவார் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு அமைவாகவே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவாகினார் - என்றார்.

மீண்டும் கருத்துத் தெரிவித்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர், கோத்தாபய ராஜபக்சபதவிவிலகியபோதே நாடாளுமன்றமும் பதவி விலகியிருக்கவேண்டும். நாடாளுமன்றத்துக்கும் மக்கள் ஆணை இல்லை என்று குறிப்பிட்டனர்.

இதனையடுத்து ஜீவன் தொண்டமான் மீண்டும் பதிலளிக்கையில், நீங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளைத்துறந்துவிட்டு பின்னர் இதைச் சொல்லலாம் - என்றார்.

இதன்போது கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஏற்கனவே இங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியாமல் அமைச்சர் டக்ளஸ் பன்முகப்படுத்தப்பட்ட நிதியைப் பங்கிடுகிறார்.

பதவி துறந்தால் இது இன்னமும் மோசமாகும் - என்றார். (ஒ-125-26)

## யாழ். போதனாவில் 91 இளவயதுக் கர்ப்பங்கள்; கடந்த ஆண்டு பதிவு

யாழ்ப்பாணம், பெப். 17

கடந்த ஆண்டு யாழ். போதனா மருத்துவமனையில் 91 இளவயதுக் கர்ப்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

2023ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் 18 வயதுக்குட்பட்ட சிறுமிகளில் 91 பேர் கர்ப்பம் தரித்த நிலையில் யாழ். போதனாவில் சேர்க்கப்பட்டு குழந்தைகளை பிரசவித்துள்ளனர். (ஒ-125)



## முத்துஐயன்கட்டுக்குளம் திறந்துவிடப்பட்டது

சிறுபோகப் பயிர்செய்கைக்காக முத்துஐயன்கட்டு குளத்தின் நீர் நேற்று திறந்துவிடப்பட்டுள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி நீர் விநியோகம் நிறுத்தப்படும். உப உணவு செய்கையாளர்களுக்கும் நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலம் நீரைப்பெற்றுக்கொள்ள இம்முறை வழிவகை செய்யப்பட்டுள்ளது. (ஒ-19)

## வங்கிக்கிளை திறந்திருக்கும்

யாழ்ப்பாணம், பெப். 17

தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரிக் கிளை பிரதி சனிக்கிழமைகளில் மதியம் 12 மணி வரை வங்கி நடவடிக்கைகளுக்காக திறந்திருக்குமென கிளை முகாமையாளர் அறிவித்துள்ளார். (ஒ-9)

## கிளி. ஒருங்கிணைப்புக் கூட்டம்

கிளிநொச்சி, பெப்.17

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது மாவட்டத்தின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டன. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், அங்கஜன் இராமநாதன் ஆகியோரும் பங்குபற்றினர். (எ-113)

## வாக்கு வங்கியைக் காட்டி அச்சுறுத்துகிறது இந்தியா

### வசந்த பண்டார கூறுகின்றார்

கொழும்பு, பெப்.17

வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட இலங்கையில் 25 லட்சம் வாக்குகளை நிர்ணயிக்கக்கூடிய பலம் இந்தியாவுக்கு உள்ளது. அதை வைத்தும் இலங்கை தொடர்பில் தனது எதிர்பார்ப்புகளை ஈடேற்றிக்கொள்வதற்கு அந்நாடு முயற்சித்து வருகின்றது என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளரான கலாநிதி வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையை ஆக்கிரமிப்பதற்கு இந்தியா 5 உபாயங்களைக் கடைபிடித்துவருகின்றது.

அரசியல் கட்சிகளை விலைக்கு வாங்குதல், பலவந்தமாகத் திட்டங்களை திணித்தல், உளவாளிகள் ஊடாக சூழ்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், இலங்கையில் ஏற்பட்ட நெருக்கடி நிலைமையை இந்தியா பயன்படுத்திக் கொண்டு, இதுவரை செய்ய முடியாத திட்டங்களை செயற்படுத்துதல், தமிழர்களின் வாக்குப்பலம் என்ற ஐந்துமே அந்த உபாயங்கள் - என்றார். (எ-44)

## நூல் வெளியீடு

ஆசிரியர் த. சிறீபிரகாஸ் எழுதிய நெடுந்தீவு நாட்டார் பாடல்களின் தொகுப்பு நூலான 'முள்ளில்லாவேலி' நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நெடுந்தீவு மகா வித்தியாலயப் பிரதான மண்டபத்தில் ஓய்வுநிலைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி சா. கிருஷ்ணதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஒ-66)

## மூதாட்டி சாவு

யாழ்ப்பாணம், பெப். 17

நெஞ்சு வலிப்பு ஏற்பட்டதை அடுத்து பனடோலும் தேநீரும் அருந்திவிட்டு கதிரையில் அமர்ந்திருந்த மூதாட்டி ஒருவர் நேற்றைய தினம் உயிரிழந்துள்ளார்.

கந்தப்பு வளவு ஒழுங்கை அல்வாய் வடக்கைச் சேர்ந்த செல்லம்மா தர்மலிங்கம் (வயது- 72) என்ற மூதாட்டியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழப்புத் தொடர்பில் பருத்தித்துறை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணை மேற்கொண்டார். (ஒ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ந்தும் எல்லை மீறிய இந்திய மீனவருக்கு சிறை



**யாழ்ப்பாணம், பெப். 17**

**எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கடந்த 3ஆம் திகதி இரவு, நெடுந்தீவுக்கு அண்மித்த கடற்பரப்பில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 23 இந்திய மீனவர்களில் 20பேர் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சிறைத்தண்டனை என்ற நிபந்தனைகளுடன் விடுதலை செய்யப்பட்டனர்.**

இரண்டு படகுகளின் ஓட்டுநர்களுக்கும் ஆறுமாத கால சிறைத் தண்டனை வழங்கப்பட்டதுடன் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. அத்துடன் ஒரு மீனவர் இரண்டாவதுதடவையும் எல்லை தாண்டி வந்ததனால் அவருக்கு ஒரு வருட கால சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. (ஒ-27-100-66)

## விண்ணப்பங்கள் கிடைக்கவில்லை

'அஸ்வெசும' உதவித் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பதிவுக்கான படிவங்கள் இதுவரை பிரதேச செயலகங்களுக்குக் கிடைக்காததால் பொதுமக்கள் படிவத்தைப் பெற பிரதேச செயலகங்களுக்குச்சென்று ஏமாற்றமடைந்து வருகின்றனர்.

'படிவங்கள் நேற்றுமுன்தினம் தொடக்கம் விநியோகம் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் படிவங்கள் இதுவரை பிரதேச செயலகங்களுக்குக் கிடைக்கவில்லை. முதலாம் கட்டத்துக்கான பதிவுகள் கணினியில் பதிவேற்றப்பட்டபோது அவற்றைத் தரவிறக்கம் செய்து பொதுமக்களுக்கு வழங்கினோம். இரண்டாம் கட்டப் பதிவுக்கான படிவங்கள் இதுவரை கணினியில் பதிவேற்றப் படவில்லை. பதிவேற்றப் பட்டதும் தரவிறக்கம் செய்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படும்' என்று பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-9)

## கரப்பானுக்கு ரூ.36,000 தவளைக்கு ரூ. 5,000

யாழ்ப்பாணம், பெப். 17

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் ஆளுகைக்குட்பட்ட செல்வச்சந்நிதி ஆலயத்தின் சுற்றுச்சூழலில் அமைந்துள்ள விற்பனை நிலையங்களுக்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வல்வெட்டித்துறை பொதுச்சுகாதாரப் பரிசோதகரால் கடந்த மாதம் தாக்கல் செய்யப்பட்ட உணவகத்துக்கு எதிராக நேற்று விசாரணை இடம்பெற்றதைத் தொடர்ந்து சுகாதாரத்துக்கு ஊறுவிளைவிக்கக் கூடிய வகையில் கரப்பான்பூச்சி மற்றும் புழுக்களுடன் உணவகத்தை நடத்திய உரிமையாளருக்கு 36 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டது.

செல்வச்சந்நிதி ஆலய வளாகத்தில் அமைந்துள்ள ஐஸ்கிறீம் விற்பனை நிலையத்தில் தவளையுடன் கூடிய ஐஸ்கிறீமை நுகர்வோருக்கு விற்பனை செய்த முகாமையாளருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

(ஒ-7-66-26)




## நிரந்தரமாக அமையுங்கள் யானை வேலி

முல்லைத்தீவு, பெப். 17

பழம்பாசிக் கிராமத்திலும் மணவாளன்பட்டமுறிப்புக் கிராமத்திலும் யானைகளைக் கட்டுப்படுத்துமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காலபோக நெற்செய்கையின் போது கமநல சேவை நிலையங்களால் யானை வேலிகள் அமைக்கப்பட்டதன் காரணமாக யானைகள் வருவது வீழ்ச்சி அடைந்திருந்தது. ஆனால் தற்போது யானைகள் கூட்டம் கூட்டமாக குடியிருப்புகளுக்குள் வந்து தென்னை, வாழைபோன்ற பயன்தரு மரங்களை அழிப்பதுடன் குடியிருப்பாளர்களையும் அச்சத்தில் ஆழ்த்தி வருகின்றன.

பயிர்ச்செய்கைக் காலங்களில் மட்டுமல்ல நிரந்தரமாகவே கிராமங்களுக்குள் யானை வராமல் யானை வேலிகளை அமைத்துத் தருமாறு ஒட்டுசுட்டான் பிரதேச செயலரிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-13)



## அலைகளில் சிக்குண்டு விபத்துக்குள்ளான படகு

யாழ்ப்பாணம், பெப்.17

பருத்தித்துறை மீன்பிடித்துறைப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை நடந்த விபத்தில் படகொன்று சேதமடைந்தது.

வியாபாரிமூலை மீன்பிடித்துறையில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்று, கரைதிரும்பும் போது வான் பகுதியில் படகு நுழைய முற்பட்டபோது மீன்பிடிப் படகில் பொருத்தப்பட்டிருந்த வெளியிணைப்பு இயந்திரம் திடீரெனச் செயலிழந்தது. இதனால் படகு கடல் அலையில் சிக்குண்டு வான் பகுதியில் உள்ள கற்பாறைகளுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-100)

## சிறீதரனுக்கு வாழ்த்து கூறினார் ஜீவன் தொண்டமான்

யாழ்ப்பாணம், பெப். 17

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவாகியிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனை மரியாதை நிமித்தம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலர் ஜீவன் தொண்டமான் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். யாழ்ப்பாணத்தில் உள்ள சிறீதரனின் இல்லத்தில் இந்தக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

(ஒ-20-66)



## பதினம் தெரியுமோ?

முந்தி ஆரும் ஒப்பீஸ் வழியில பிழைவிட்டாலோ, வேலையை ஒழுங்காச் செய்யாட்டிக்கோ ' உன்னைத் தண்ணியில்லாக் காட்டுக்கு ட்ரான்ஸ்பர் பண்ணிப்போடுவன்" எண்டு மேலதிகாரிமார் வெருட்டுறவை. ஆனால் உண்மையிலேயே தண்ணியில்லாத இடமெண்டால் இலங்கையில அது கச்சதீவாத்தான் இருக்கமுடியும். அங்க அந்தோனியார் கோயிலும், நேவிக்காம்பும், மரஞ்செடி கொடியளும் தான் இருக்கு. நேவிக்காரருக்கு கூட அங்க வேற இடத்தில இருந்துதான் தண்ணி போறது. இப்பிடி தண்ணியோ, குடிமனையோ இல்லாத ஒரு தீவுக்கு சனங்கள் அந்தோனியாரைக் கும்பிடப் போகேக்க அவைக்கு அதுக்குரிய ஒழுங்குகளைச்செய்துகுடுக்க வேண்டியது அரசாங்கத்தின்ர கடமை. வழக்கமா அந்தோனியாருக்குப் போற இலங்கை ஆக்களுக்கும், இந்தியாவில இருந்து வாறவைக்கும் நேவிக்காரர் தான் சாப்பாடு , தண்ணி குடுக்கிறவை. அதுக்கெண்டு அவைக்குத் தனியா ஒதுக்கீடெல்லாம் இருக்கு. ஆனால் போனமுறை தங்களுக்கு அந்தோனியார் திருவிழாவுக்காக நேவிக்காரருக்கு அரசாங்கத்தால காசு ஒதுக்குப்படேலை. அதால அவை போன வருசம் நடந்த திருவிழாவில ஏனோதானோ எண்டுதான் சாப்பாடும், தண்ணியும் குடுத்தவை. அதுவும் ஒழுங்கான சாப்பாடில்லை எண்டும், எல்லாருக்கும் கிடைக்கேலை எண்டும் எக்கச்சக்கம் முறைப்பாடு வேற.

அதால இந்தமுறை தாங்கள் தண்ணியோ, சாப்பாடோ தரமாட்டம் எண்டு நேவிக்காரர் கைவிரிச்சுப் போட்டினம். அந்தோனியார் திருவிழா ஒண்டும் நேவிக்காரரின்ர உபயம் இல்லைத்தானே. அவை சாப்பாடு, தண்ணி தரமாட்டம் எண்டால், கச்சேரிக்காரரோ, இல்லாட்டி நெடுந்தீவுப் பிரதேச செயலகமோ அதுக்கான ஏற்பாட்டைச் செய்திருக்க வேணுமெல்லோ. ஆனால் அவையும் நெடுந்தீவு ஏற்பாட்டுக் கூட்டம் எண்ட பேரில என்னென்னவோ எல்லாம் கதைச்சுப் போட்டு கடைசியில 'அங்க போற எல்லாரும் தங்களுக்கு சாப்பாடு, தண்ணி கொண்டு வரோணும். அங்க வந்து சமைக்கவும் அனுமதி இல்லை' எண்டு அறிக்கை விட்டிருக்கினம். உதோ பொறுப்பான அதிகாரிமார் செய்யிற வேலை? அங்க நல்லதண்ணிக் கிணறு இருந்தாலாவது பரவாயில்லை, அதில தண்ணியைக் கிள்ளி சனம் குடிக்கும் எண்டு சொல்லலாம். அப்பிடியுமில்லை. கடல் பயணம் செய்துபோட்டு, சுத்திவர உப்புக்காத்து அடிக்கிற இடத்தில ஒருநாள் முழுக்க நிண்டால் வழக்கத்தைவிட தண்ணி கூடத்தான் இழுக்கும். அதைவிட கச்சதீவுக்குப் போற படகுகளும் , யாழ்ப்பாணத்து மினிபஸ்ஸுகள் மாதிரி ஆக்களை அடைஞ்சுகொண்டுதான் போறதுகள். அதுக்க உந்தச் சாப்பாட்டுச் சாமான்களையும், தண்ணி பரல்களையும் எப்பிடிக் கொண்டுபோக ஏலும்? அதைவிட நெடுந்தீவில ஒரு சாப்பாட்டுக்கடைதான் வழக்கமா போட அனுமதிக்கிறவை. நேவி சாப்பாடு குடுக்கேக்கையே, அங்க நிக்கிற சனம் அந்த ஒற்றைக்கடையில தள்ளுமுள்ளுப்பட்டுத்தான் சாப்பாட்டை வாங்கமுடியும். இப்ப நேவியின்ர சாப்பாடும் இல்லையெண்டதால எல்லாச் சனமும் அந்தக் கடையைத்தான் மொய்க்கப்போகுதுகள். சிலவேளை சாப்பாடு வாங்கப்போய் அந்த நெரிசலில சிக்கி, ஆக்களுக்கு பாதிப்பும் வரக்கூடும். இப்பிடி அகதி முகாம் மாதிரி அடிபட்டுச் சாப்பாடு வாங்கித்தானோ அந்தோனியாரைக் கும்பிட வேணும்?

கச்சேரிக்காரரிட்டையோ, நெடுந்தீவுப் பிரதேச செயலகத்திட்டையோ அந்தோனியாரிட்ட வாறவைக்கு சாப்பாடு, தண்ணி குடுக்கக் காசில்லாட்டி தனியாரிட்ட யாழ்ப்பாணம் கச்சேரிக்காரர் உதவி கேட்டிருந்தால், அள்ளிக்குடுக்க ஆயிரம் பேர் இருப்பினம். இல்லாட்டி ஆயர் இல்லமாவது ஏதும் செய்திருக்கும். அதை விட்டிட்டு இப்பிடி சனத்திட்ட 'தண்ணியைக் கொண்டுவா, சாப்பாட்டைக் கொண்டு வா' எண்டு ஆய்க்கினைப்படுத்திறது அந்தோனியாருக்கே பொறுக்காது கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகள்

## பங்குனித்திங்கள்

சாவகச்சேரி, பெப்.17
மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் பங்குனித்திங்கள் நாள்களில் வழமைபோல அபிஷேகம், பொங்கல், அர்ச்சனை, படையல் என்பன நடைபெறவுள்ளன என ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (ய-131)

## நாவலர் விழாவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், பெப்.17
உடுவில் இந்து இளைஞர் மன்றம் நடத்தும் நாவலர் விழாவும் பாலர் பாடசாலை பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப.1.30 மணிக்கு உடுவில் மேற்கு பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் வலிகாமம் வலய ஆசிரிய ஆலோசகர் கணேசரத்தினம் ஆதித்தன் பிரதம விருந்தினராகவும். சைவப்புலவர் செ.த.குமரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ய-66)

## குருபூசை

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலய வளாகத்திலுள்ள குடைச்சுவாமிகளின் சமாதி ஆலயத்தில் ஈழத்துச்சித்தர் குடைச் சுவாமிகளின் வருடாந்த குருபூசை இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.
காலை 7.30 மணிக்கு திருவாசகம் முற்றோதல் நிகழ்வும் மு.ப. 11 மணிக்கு அபிஷேகமும் பூசை வழிபாடுகளும் இடம்பெறுமென ஆலயப்பிரதமகுரு சிவகதிர்காமநாதக்குருக்கள் தெரிவித்தார். (ப-66)

## குருபூசையும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், சைவ பரிபாலன சபையால் நடத்தப்படவுள்ள புண்ணிய நாச்சியம்மையார் குருபூசை தினமும் சைவநெறித்தேர்வு பரிசளிப்பு நிகழ்வும் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இல. 66, கல்லூரி வீதியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
நிகழ்வுக்கு சபை உறுப்பினர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிர்வாக சபையினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ய)

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், பெப்.17
உரும்பிராய் உதவும் நண்பர்கள் அமைப்பு, உரும்பிராய் மேற்கு இளைஞர் சனசமூக நிலையம், உரும்பிராய் மேற்கு இளைஞர் கழகம் என்பன இணைந்து நடத்தும் குருதிக்கொடை முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை உரும்பிராய் மேற்கு இளைஞர் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கலந்துகொள்ளும் அனைவருக்கும் பயனுள்ள மரக்கன்று மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும். (ய-66)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையக் கேட்போர் கூடத்தில் 'குற்றங்களும் வன்முறையும் அற்ற நம்பிக்கையுடன் வாழக்கூடிய சமூக அமைப்பை உருவாக்குதல்' எனும் தொனிப்பொருளில் வர்த்தகர்களுக்கு விழிப்புணர்வூட்டும் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு நடைபெறவுள்ளது.
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆகியோரின் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் வர்த்தகர்கள் தவறாது சமுகமளித்து சட்டம், ஒழுங்கு மற்றும் பாதுகாப்புத்தொடர்பாக தங்களிடமுள்ள பிரச்சினைகளை முன்வைக்குமாறு யாழ். வணிகர் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது. (ப-66)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.17
தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி வர்த்தக சங்கத்தின் பொதுக்கூட்டம், புதிய நிர்வாகிகள் தெரிவு என்பன பிரதேச செயலக மண்டபத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ளன. இந்த சமுர்த்தி வாழ்வாதார உதவித் திட்டத்தில் இணைந்துள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-9)



## பதவியுயர்வு

யாழ். மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் பிரதி அதிபராக சுப்பிரமணியவேல் பிரகலாதன் பதவியுயர்வு பெற்றுள்ளார்.
இவர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் பிரபல விஞ்ஞா ன பாட ஆசிரியராவார். (ச)

# இறைவழி தொடர்வோம்




இயேசு சுங்கச்சாவடியில் அமர்ந்திருந்த லேவி என்னும் பெயருடைய வரித்தண்டுபவர் ஒருவரைக் கண்டார். அவரிடம் என்னைப் பின்பற்றி வா! என்றார் இயேசுவின் அழைப்பைக் கேட்டு எல்லாவற்றையும் விட்டுவிட்டு இயேசுவைப் பின்தொடர்ந்தார். முறைகேடாக ஆக்கிரமிப்பு அரசிற்கு வரி சேகரிப்பதால் பாவி எனக் கருதப்பட்டவர் மனம்மாறி தன் சக வரிவசூலிப்பாளர்களையும் அழைத்து இயேசுவின் பிரசன்னத்துடன் விருந்து கொண்டாடினார். இறை அழைப்புக்கு செவி மடுக்கும் போது எம்மில் மாபெரும் மாற்றங்கள் நிகழும்
நீதிமான்களையல்ல பாவிகளையே தேடிவந்தேன் என்று கூறிய இயேசு அதனை தனது செயலால் மெய்ப்பிக்கின்றார். பாவத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களை பரமனின் பாதைக்கு கொண்டு வருவது தான் நற்செய்திப்பணி அழைப்பின் தலையாய நோக்கமாக வேண்டும் பாவிகள் வெறுத்து ஒதுக்கப்பட வேண்டியவர்கள் அல்ல. மதிக்கப்படவேண்டியவர்கள் மனமாற்றம் பெறவேண்டியவர்கள் இறை அழைப்பிற்குள், ஈர்க்கப்படவேண்டியவர்கள்.
எனவே பாவிகள், நீதிமான்கள், ஏழையர், செல்வர் என்ற பேதங்கள் அகற்றி இறைபணியில் இணைந்து பயணிப்போம். பாவத்தை வெறுப்போம். மறப்போம். மன்னிப்போம். மனம்மாறுவோம். இறை வழி தொடர்வோம்.

**யே.சுபீட்சன்**, கொழும்புத்துறை

# தொழிற்சந்தை

வடமாகாண சபை, சர்வோதயம், வேள்ட் விஷன் நிறுவனம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடத்தப்படும் தொழிற்சந்தை எதிர்வரும் 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.
பிரதம செயலாளர் செயலகம், மாவட்ட செயலகம், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம், கல்வி அமைச்சு, தொழிற்பயிற்சி அதிகார சபை மற்றும் சர்வோதயம், வேள்ட் விஷன் ஆகிய நிறுவனங்கள் பங்காளிகளாக கலந்துகொண்டு தொழில் வழிகாட்டல், உயர் கல்வி, இடைநிலைக் கல்வி, மற்றும் தொழில்நுட்ப கல்வி உள்ளிட்ட கல்வி நிறுவனங்களின் சேவை, தொழிற் கடவுச் சீட்டு விநியோகத்திற்கான பதிவு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பற்றிய விவரங்கள் வழங்கல் போன்ற சேவைகளை வழங்கவுள்ளன. நிகழ்வில் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலிருந்தும் தலா ஐந்து பேர் கலந்துகொள்ள முடியும். எதிர்வரும் 20 ஆம் திகதி நெடுந்தீவு, மருதங்கேணி, ஊர்காவற்றுறை, வேலணை, காரைநகர், நல்லூர், சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய பிரதேசசெயலக பிரிவுகளையும், 21 ஆம் திகதி தெல்லிப்பழை, யாழ்ப்பாணம், உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய், கோப்பாய், கரவெட்டி பிரதேச செயலக பிரிவுகளையும் சேர்ந்த பயனாளிகள் கலந்துகொள்ள முடியும் என்று யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் சி.சத்தியசோதி அறிவித்துள்ளார். (ய-9)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள். திடீர் செலவுகளும் ஏற்படும்.

**இடபம்:** பிரமுகர்களை சந்திப்பீர்கள். வீண் செலவுகள் ஏற்படும். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உத்தியோகத்தில் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**மிதுனம்:** திட்டவட்டமாக சில முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். அரசால் ஆதாயம் உண்டு. அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**கடகம்:** சந்தோஷம் நிலைக்கும். பாதியில் நின்ற வேலைகள் விரைந்து முடியும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**சிம்மம்:** வேலைச்சுமையால் உடல் அசதி மனச் சோர்வு வந்து நீங்கும். அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் பனிப்போர் வந்து நீங்கும். வளைந்து கொடுக்க வேண்டிய நாள்.

**கன்னி:** குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வீண் வாதங்களில் ஈடுபட வேண்டாம். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்சினைகள் வந்து விலகும்.

**துலாம்:** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் கடமையுணர்வுடன் செயற்படுவார்கள். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள் சிறப்பான நாள்.

**விருச்சிகம் :** கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுகூர்ந்து மகிழ்வீர்கள். விருந்தினர்களின் வருகையால் வீடு களை கட்டும். வாகனவசதி பெருகும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

**தனுசு:** மனம் விட்டு பேசுவீர்கள். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். உரிமையை பெறுவீர்கள். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**மகரம்:** அநாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள். இடர்பாடுகளை சமாளிக்க நேரிடும்.

**கும்பம்:** விவாதங்கள் வந்து போகும். மனைவி வழியில் அந்தஸ்து உயரும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். வாகனத்தை சீர் செய்வீர்கள். வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள்.

**மீனம்:** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


## இவர்களா தீர்வைப் பெற்றுத்தருவர்?

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்ட பின்னர் தமிழர்களின் அரசியல்செல்நெறியைத் தீர்மானிக்கும் பொறுப்பு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் மீது 2009 ஆம் ஆண்டு மே மாதம் சுமத்தப்பட்டது. போரின் தோல்வி, மக்களின் அவலம், ராஜபக்சக்களின் அச்சுறுத்தல் என்று எல்லாப்பக்கமும் நெருக்குவாரமாக இருந்தமையால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஓர் ஒழுங்குக்குள் இருந்தது. ஆனால் அவையெல்லாம் சிறிது காலம்தான். எப்போது ஜனாதிபதித்தேர்தலில் சரத் பொன்சேகாவை ஆதரிப்பது என்ற முடிவை அந்தக் கட்சி எடுத்ததோ அன்றிலிருந்து சரிவு ஆரம்பித்தது. உடைவுகள் தொடங்கின. அதன் பின்னரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்ளக முரண்பாடுகள் அடிக்கடி நிகழத் தொடங்கின. கஜேந்திரகுமார் வெளியேற்றம் அந்த முரண்பாட்டின் தொடக்கப்புள்ளியாக இருந்தது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். , தமிழ்க்காங்கிரஸ் என 5 கட்சிகளின் கூட்டாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இருந்தாலும், இலங்கைத் தமிழரசுக் கட்சியே ஆதிக்கம் செலுத்தியது வெளிப்படை. இதனால் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறுவிதமான கொள்கைமுடிவுகளை முன்வைக்கத் தொடங்கினர். கூட்டமைப்பின் தலைவராக இருந்த சம்பந்தனோ, ஜனநாயகக் கட்சி என்றால் கருத்து வேறுபாடுகள் இருக்கத்தான் செய்யும் என்று சமாளித்துக்கொண்டிருந்தார். ஆனால் அது கூட்டமைப்பின் உடைவுக்கான அத்திபாரம் என்பதை அவர் மூடிமறைத்துக்கொண்டிருந்தார். இப்போதும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்குள் நடப்பது அதுதான். அந்தக் கட்சியின் தலைமைக்கு எப்போது இருவர் போட்டியிடப்போகின்றனர் என்பது உறுதியானதோ அப்போதே அந்தக் கட்சிக்குள் பிளவு - உடைவு - ஆரம்பித்துவிட்டது. தலைமைப் பதவிக்குப் போட்டியிட்ட இருவரும், இது ஜனநாயகத்தின் உச்சம் என்று சொல்லிக் கொண்டாலும் உள்ளே நீறுபூத்த நெருப்பாக பிளவு கொழுந்து விட்டெரிந்துகொண்டிருந்தமையும் அவர்கள் இருவருக்கும் தெரியும். இருவரின் ஆதரவாளர்கள் என்று தங்களை அடையாளப்படுத்தியோர் இந்தப் பிளவை கூர்மைப்படுத்திக்கொண்டேயிருந்தனர். தலைவர் தெரிவுக்கான தேர்தல் முடிவடைந்து நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்ட பின்னர் ஊடகங்களைச் சந்தித்தபோது, தோல்வியடைந்த எம்.ஏ.சுமந்திரன், ''இருவரும் இணைந்து பணியாற்றுவோம்'' எனக் குறிப்பிட்டிருந்தார். ஆனால், உண்மையில் அவர் அதை மனதாரச் சொல்லவில்லை என்பதையே அதன் பின்னர் இடம்பெற்ற பொதுக்குழுக் கூட்டத்தின்போது அவரது கருத்து பிரதிபலித்திருந்தது. கட்சியில் உள்ள இரு அணிகளும் ஒன்றாக வேண்டுமாக இருந்தால் எனக்கு பொதுச் செயலர் பதவி வழங்கப்பட்டால்தான் அது சாத்தியமாகும் என்று குறிப்பிட்டிருந்தார். இதன் ஊடாக கட்சியில் இரு அணிகள் இருக்கின்றன என்பதையும் அது தலைவர் தேர்தல் ஊடாகவே உருவானது என்பதையும் அவர் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்.

இப்போது இதன் விளைவு, கட்சியை நீதிமன்றப் படியேற்றியிருக்கின்றது. நீதிமன்றத்தை நாடியவர்கள் எந்த அணியைச் சேர்ந்தவர்களாக இருப்பினும், கட்சி தொடங்கப்பட்ட நோக்கத்தை விடவும் அதில் பதவி பவிசுகளே முக்கியம் என்று எண்ணுபவர்களாக அவர்கள் இருந்திருக்கவேண்டும். ஒன்றில் தமக்கான பதவிக்காக அல்லது தாம் விரும்புவோர் பதவியைப் பெற வேண்டும் என்பதற்காக அவர்கள் நீதிமன்றத்தை நாடியிருக்கலாம். தமிழ் மக்களின் விடுதலைக்காக - விடிவுக்காக போராட புறப்பட்ட கட்சி இன்று தன்னை பாதுகாத்துக் கொள்வதற்கு தனது கட்சி அங்கத்தவர்களுடன் போராட வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது.

கட்சிப்பதவிகளுக்காகத் தமக்குள்ளேயே முட்டி மோதுபவர்கள் தான் அரசியல் தீர்வை எங்களுக்குப் பெற்றுத் தரப்போகின்றார்களா? என்ற ஒவ்வொரு தமிழனின் கேள்வியும் நியாயமானதே.




## நிறைவேற்றதிகார ஒழிப்பு வெற்றியளிக்கப்போவதில்லை

கொழும்பு, பெப். 17

**உள்ளூராட்சிசபைத் தேர்தலை நடத்துவதற்கே நடுங்கிய அரசு, சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லுமா? நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை இல்லாதொழிக்க முன்னெடுக்கப்படும் முயற்சி வெற்றியளிக்காது - இவ்வாறு சுதந்திர மக்கள் சபையின் நாடாளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது- ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசமைப்பில் இடமில்லை. எனினும், இதற்கான முயற்சி குறுக்கு வழியில் இடம்பெற்றால் அதனை எதிர்ப்போம். வீதியில் இறங்குவோம். ஜே.வி.பி. பிரச்சினையின்போது கூட ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டது. எனவே, நவம்பர் மாதத்துக்கு முன்னர் தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டுபெரும்பான்மைப் பலமும், சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தப்பட வேண்டும். இந்த அரசு சாதாரண பெரும்பான்மை இல்லாது தள்ளாடும் நிலையிலேயே உள்ளது- என்றார். (ஒ-44)

## எல்லாமே வதந்திகள்

*சந்திரிகா தெளிவுபடுத்தல்*

கொழும்பு, பெப். 17
ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பாக இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை எனவும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமைப் பதவியை ஏற்கப்போவதாக வெளிவரும் தகவல்களில் உண்மையில்லை எனவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்திரிகா ஆதரிக்கவுள்ளார் என கடந்த சில தினங்களாக ஊடகங்களில் வெளியான தகவல் தொடர்பிலேயே அவர் இந்தத் தெளிவூட்டலை மேற்கொண்டுள்ளார். (ஒ-6)

## பலஸ்தீன அரசு அமைய இலங்கை ஆதரவளிக்கும்



### இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சரிடம் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 17
இஸ்ரேல் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி பலஸ்தீன அரசை அமைப்பதற்கு இலங்கை ஆதரவளிக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இஸ்ரேலின் போக்குவரத்து மற்றும் வீதிப் பாதுகாப்பு அமைச்சர் பிரிகேடியர் ஜெனரல் மிரி ரெகேவ் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இதன்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார். (ஒ-44)

## வழிபாட்டுத் தலங்களிலும் வரி அறவிடப்படவேண்டும்

மக்கள் கஷ்ரப்பட்டு உழைத்து வரிப்பணம் செலுத்தமுடியாவிட்டாலும் ஆலயங்களுக்கு பணத்தைக் கொடுக்கிறார்கள். இந்தப்பணத்துக்கு வரி அறவிடப்படுவதில்லை. எனவே அரசாங்கம் வழிபாட்டுத்தலங்களிலும் வரி அறவிட வேண்டும் - இவ்வாறு வனவளப் பாதுகாப்பு அமைப்பின் நிறுவுநர் வனவாசி ராகுலதேரர் தெரிவித்துள்ளார். (ஒ-6)

## தேர்தல் உடன்பாட்டில் கைச்சாத்திடவில்லை

ஐக்கிய மக்கள் சக்தியுடன் தமிழ் முற்போக்கு கூட்டணி செய்துக்கொண்டது, சமூகநீதி உடன்பாடாகும். இது தேர்தல் ஒப்பந்தம் அல்ல, என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி அரசு உருவாகுமானால், அப்போது, எமது மக்கள் தொடர்பாக முன்னெடுக்கக்கூடிய நலவுரிமை திட்டங்கள் என்ன என்பது பற்றிய எழுத்து மூலமான உள்ளக சமூகநீதி உடன்பாடு இது வாகும். இது தேர்தல் ஒப்பந்தம் அல்ல - என்றார் மனோ. (ஒ-இ)

### நாளை

18.02.2024
ஞாயிற்றுக்கிழமை
மாசி–06

சுபநேரம் : 09.32 - 11.02
ராகுகாலம் : 05.02 - 06.32

### நாளொரு நல்வார்த்தை

கலையில் தப்பு தப்பு என்று சொல்லப்பட்டு வருவது ஒருநாள் சரியாகிவிடும். சரி சரி என்று சொல்லப்பட்டு வருவது தப்பாகவும் ஆகிவிடும்.

– கி.ராஜநாராயணன்–

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்வி அமைச்சு**
**திறன்கள் அபிவிருத்தி, தொழில்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவு**

SLGTI SRI LANKA GERMAN TRAINING INSTITUTE KILINOCHCHI

## இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனம்

**அறிவியல் நகர், கிளிநொச்சி**

**ஓட்டுனர் பதவிக்கான வெற்றிடம் (ஒப்பந்த அடிப்படையில்)**

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் ஜெனரலால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் மோட்டார் வாகன ஓட்டுநர் உரிமத்தை வைத்திருப்பவர்கள் மற்றும் நிறுவனத்தின் போக்குவரத்துத் தேவைகளை வழங்குவது தொடர்பான கடமைகளில் அனுபவம் உள்ளவர்கள்.

**தகுதிகள்-வெளியக**

க.பொ.த சாதாரண பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் குறைந்தது இரண்டு (02) திறமைச்சித்தி பெற்றிருக்க வேண்டும்.

**மற்றும்**

ஆணையாளர் நாயகம். மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கனரக வாகன உரிமம் மற்றும் ஓட்டுநர் உரிமத்தைப் பெற்ற பின்னர் வாகனம் ஓட்டுவதில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**உள்ளக**

ஆணையாளர் நாயகம். மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கனரக வாகனம் ஓட்டுவதற்கான உரிமம் மற்றும் ஓட்டுநர் உரிமத்தைப் பெற்ற பின்னர் வாகனம் ஓட்டுவதில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**மற்றும்**

முதன்மை நிலை (PL 2) அல்லது (PL 1) பிரிவில் ஒரு பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது** வயது 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயது வரம்பு பொருந்தாது.

**ஒவ்வொரு விண்ணப்பதாரரும்**

I. இலங்கையின் குடிமகனாக இருக்க வேண்டும்

II. பதவியின் கடமைகளை சிறப்பாக நிறைவேற்றுவதற்கும் இலங்கையின் எந்தவொரு இடத்திலும் பணியாற்றுவதற்கும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

III. சிறந்த தார்மீக குணம் கொண்டவராக இருக்க வேண்டும்.

அனைத்து விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்களை பணிப்பாளர்/அதிபர், இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனம், அறிவியல் நகர், கிளிநொச்சி என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலம் 07.03.2024 அன்று அல்லது அதற்கு முன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(CR 41825) A

# சித்த மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், பெப். 17

யாழ். இந்தியத் துணைத்தூதரகமும் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இலவச சித்த மருத்துவ முகாம் வல்வெட்டித்துறையில் நடைபெறவுள்ளது.

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 4 மணிவரை இந்த மருத்துவ முகாம் நடைபெறுகிறது. குறித்த மருத்துவ முகாமில் பங்கேற்பவர்களுக்கு சிகிச்சை மற்றும் மருந்துகள் முற்றிலும் இலவசமாக வழங்கப்படவுள்ளன. (ம-100)

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 06 . 10 . 1964

இறப்பு 27 . 02 . 2023

**திருமதி கிருஸ்ணமோகன் சிவஞானஜோதி**
**திதி:- வளர்பிறை அட்டமி**
**(ஆசிரியை - கைதடி கலைவாணி வித்தியாலயம் )**

மண்விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
ஓராண்டு சென்றாலும்
கண்விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்.

சந்திரபுரம்,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி

தகவல்:
சு.கிருஸ்ணமோகன்
(கணவர்)

(CS/54007) J-1

## மரண அறிவித்தல்

மலர்வு 10 . 08 . 1946



உதிர்வு 12 . 02 . 2024

### நடராசா தனலெட்சுமி (ஞானம்)

புங்குடுதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா தனலெட்சுமி அவர்கள் கடந்த (12.02.2024) திங்கட்கிழமை அன்று லண்டனில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பரமு - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், நடராசா (லண்டன் ) அவர்களின் அன்பு மனைவியும், சிவகுமார் (கனடா), சசிகலா (கனடா), பிருந்தா (இங்கிலாந்து), ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகராசா (கனடா), சிவகுமார் (இங்கிலாந்து) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற சதானந்தன், அம்பிகாவதி (இலங்கை), ஜெயலெட்சுமி (ஜேர்மன்), ஆகியோரின் அன்புச் சகோதரியும், குருநாதசிவம் (இலங்கை), விக்கினேஸ்வரன் (ஜேர்மன்), ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, கனகம்மா, சிவக்கொழுந்து மற்றும் பூரணம், சிவபாக்கியம் (யோகி) ஆகியோரின் மைத்துனியும் , திருஷாந்த், தியானா, சறோணியா, பிரவிந்த், கோபிந்த் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், சுரேஸ்குமார், ரமேஸ்குமார், பிரியா, சங்கீதா, நிலானி, நிஷாந்த் ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (17.02.2024) சனிக்கிழமை அன்று Divinity Funeral Care, Harrow, UK யில் 11.00 am - 3.00 pm வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் 18.02.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று Hendon Cemetery & Crematorium, லண்டனில் காலை 10 மணி முதல் பகல் 12 மணி வரை நடைபெற்று, அதனைத் தொடர்ந்து தகனக் கிரியைகள் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-


| | |
|---|---|
| கணவர் (லண்டன்) | - 0044 748 839 0245 |
| மருமகன் (இங்கிலாந்து) | - 0044 790 656 3595 |
| மகள் (இங்கிலாந்து) | - 0044 753 136 7765 |
| மருமகன் (கனடா) | - 001 416 457 0530 |
| சகோதரி (இலங்கை) | - 0094 772 387 572 |

தகவல்:
**து.குருநாதசிவம்**
(மைத்துனர்)

(CR 41824) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 03 . 1938



மறைவு 16 . 02 . 2024

### பொன்னையா துரைசிங்கம் (CTB)

சாவகச்சேரி வடக்கை (ஐயாகடை வீதி) பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா துரைசிங்கம் நேற்று (16.02.2024) வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - நல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா - தங்கம்மா தம்பியினரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் (மல்லிகா - கனடா) அன்புக் கணவரும், துஸ்யந்தன் (சுவிஸ்), தனுஸா (வவா - மீசாலை), விஜயசிறீ (கனடா), தசந்தன் (கனடா), ஜெயந்தன் (கனடா), காலஞ்சென்ற சிந்துயன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நந்தினி, ஜெயந்திரன், கெந்தீஸ்வரன், கார்த்திகா, லக்ஸ்மி ஆகியோரின் மாமனாரும், இராசமணி, மகேஸ்வரி, சிவநாதன் (புளியம் பொக்கணை), இராசதுரை, கோபாலகிருஸ்ணன் (ஜேர்மனி), தனபாலசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச்சகோர்தரனும், காலஞ்சென்ற மங்கையற்கரசி மற்றும் சந்திரசேகரம், இராஜேஸ்வரி (கனடா), மங்கலேஸ்வரி (சுவிஸ்), சந்திரேஸ்வரி, இராசேந்திரம், தெய்வேந்திரம், குலேந்திரன், ஞானேஸ்வரி, ரவீந்திரன், குலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், சேதுசன் (கனடா), பிருந்தாபன் (கனடா), பிருந்திகா, யாதவி - குணால், தர்மிகா (கனடா), விதுசன் (கனடா), விதுசா (கனடா), யஸ்மினி (சுவிஸ்), செவ்றி (சுவிஸ்), லினோறிகா (கனடா), ரிஷி (கனடா), ரித்திக் (கனடா) ஆகியோரின் பேரனும், டக்ஷிகாவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய அறிவிப்பு பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**077 909 1876**
**077 265 3402**

தகவல்:
**மகள் - ஜீவா தனுஸா (வவா)**

(CS 54006) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் நவால்னி சிறைக்குள் இறப்பு!



**மொஸ்கோ, பெப். 17**

**ரஷ்யாவின் எதிர்க்கட்சித் தலைவரும், ஜனாதிபதி புடினுக்குச் சிம்ம சொப்பனமாக இருந்தவருமான அலெக்சி நவால்னி தனது 47ஆவது வயதில் நேற்று உயிரிழந்தார்.**

மோசடி, நீதிமன்ற அவமதிப்பு, அறக்கட்டளை மூலமாக முறைகேடாக பணம் பெற்றது, தீவிரவாதத்தை தூண்டுதல் மற்றும் நிதியளித்தல், சட்டவிரோத தன்னார்வத் தொண்டு நிறுவனத்தை உருவாக்குதல், நாஜிக் கொள்கைகளுக்கு புத்துயிர் கொடுத்தல் மற்றும் ஆபத்தான செயல்களுக்கு குழந்தைகளை தூண்டுதல் என்ற பல்வேறு வழக்குகளில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு 30 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட நவால்னி ரஷ்யாவின் கார்ப் நகரத்தில் உள்ள ஆர்க்டிக் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று உயிரிழந்தார்.

சிறையில் நடைபயணம் மேற்கொண்டபோது நவால்னி திடீரென மயங்கி வீழ்ந்தார். அதன் பின்னர் அவருக்கு முதலுதவிச் சிகிச்சைகள் வழங்கப்பட்டு உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட போதிலும் அவர் அங்கு சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார் என்று ரஷ்ய சிறைத் துறை அறிவித்துள்ளது.

ஆனால், நவால்னி இயற்கை மரணம் எய்தினார் என்ற தகவலை ஏற்கப்போவதில்லை என்று நவால்னியின் தாயார் தெரிவித்துள்ளார். கடந்த 12ஆம் திகதி நவால்னியைச் சந்தித்தபோது அவர் உடல்நலத்துடன் இருந்தார். நல்லபடியாக உரையாடினார். இவ்வாறிருக்கையில் அவர் சுகவீனமுற்று உயிரிழந்திருப்பதாக அறிவித்திருப்பதை ஏற்க முடியாது. என் மகன் நவால்னியின் இறப்பு ஓர் அரசியல் கொலையாக இருக்கலாம் என்று நவால்னியின் தயார் சந்தேகம் வெளியிட்டுள்ளார். (ம)

Muthukumaru Maths Academy
இல.19, நாயன்மார் வீதி, நல்லூர்.
தரம் 6-11 கணிதம் ஆங்கில மொழிமூலம் குழு வகுப்புக்கள்
MATHEMATICS ENGLISH MEDIUM GROUP CLASSES
புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 19.02.2024
தொடர்பு: 077 864 5971
Mathematics is queen of science

வேலைக்கு ஆள் தேவை (பெண்)

கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள சிற்றுண்டிகள் தயாரிக்கும் தனியார் தொழிற்சாலைக்கு நன்கு முன் அனுபவமுள்ள பெண் மேற்பார்வையாளர் தேவை.

- வயதெல்லை 30 தொடக்கம் 40 வரைக்கும்
- வேலைநேரம் காலை 7.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை
- மாத சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

074 123 5110

(CS 27887) A-1

# சந்தோஷ் ஜா – சிறீதரன் நேற்றுச் சந்தித்துப் பேச்சு!



இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான சிறீதரன் இருவருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றுள்ளது.

வடக்கு மாகாணத்துக்கு நேற்றுச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா பல இடங்களுக்கும் சென்று பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போது யாழ்ப்பாணம் கலாசார மையத்தில் வைத்து அவர் உணவுப் பொருள்களை பொதுமக்களுக்குக் கையளிக்கும் நிகழ்விலும் கலந்துகொண்டார். இதன் பக்க அம்சமாகவே அவர் தமிழரசுக் கட்சியின் தலைவரான சிறீதரனைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். (ம-26)

PEOPLE'S BANK

## கேள்விப்பத்திர அறிவித்தல்
## மக்கள் வங்கி
## சுத்திகரிப்புச் சேவைகளுக்கான கேள்விப்பத்திரம் கோரல்

மக்கள் வங்கியின் யாழ். பிராந்தியத்தைச் சேர்ந்த யாழ். ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ். பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ்.பல்கலைக்கழகம், யாழ்.கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் ஆகிய கிளைகளிலும் கொக்குவில், மானிப்பாய், மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, பலாலி, கைதடி. உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி ஆகிய சேவை நிலையங்களிலும் யாழ்.பிராந்திய தலைமைக் காரியாலயத்திலும் சுத்திகரிப்புச் சேவைகளுக்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட சேவை வழங்குநர்களிடம் முத்திரை இடப்பட்ட விலைகள் கோரப்படுகின்றன.

மீளச் செலுத்தப்படாத ரூபா 5000/- ஐ கேள்விப்பத்திர எழுத்தாவணக் கட்டணமாக செலுத்துவதன் மூலம் 2024 பங்குனி 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணி வரை எந்தவொரு வார நாளிலும் மு.ப.9.00 – பி.ப 4.00 மணி வரை பின்வரும் கைச்சாத்திடுவோரிடம் கேள்விப்பத்திர ஆவணங்களை பரிசோதித்துப் பார்க்குமாறு கோருவோர் கேட்கப்படுவதோடு எக்காரணம் கொண்டும் கேள்விப் பத்திரக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம் குறிப்பிட்ட கிளைகள் மற்றும் சேவை நிலையங்களின் முகாமையாளர்களோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்கி அந்தந்த கட்டட வளாகங்களை பரிசோதிக்குமாறு கோருவோர் கேட்கப்படுகின்றனர்.

2024 பங்குனி 13 ஆம் திகதி புதன்கிழமை பி.ப 2.00மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு எல்லா முத்திரையிடப்பட்ட விலைக்கோரல்களும் பின்வருபவரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

பிராந்திய முகாமையாளர்,
பிராந்திய தலைமைக் காரியாலயம்,
இல:82,கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

Fax : 021-2222602
E-mail : jafrho@peoplesbank.lk
தொலைபேசி இல : 021-2222601/021-2228602

(CR 41823) A-1

# 2100 கிராம அலுவலர்கள் சேவையில் உள்ளீர்ப்பு!

கொழும்பு, பெப். 17

புதிதாக கிராம அலுவலர்களைச் சேவையில் இணைத்துக் கொள்வதற்கான நேர்முகத் தேர்வுகள் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளன என்று உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது. நாட்டில் தற்போது சுமார் 2 ஆயிரத்து 800 கிராம அலுவலர்களுக்கான வெற்றிடம் நிலவுகின்றது. அதற்கமைய, 2ஆயிரத்து 100 கிராம அலுவலர்கள் புதிதாகச் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று இராஜாங்க அமைச்சர் அஷோக பிரியந்த தெரிவித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள

# ஏழு ஆலயங்களை வழிபட அனுமதி!

யாழ்ப்பாணம், பெப். 17

யாழ்ப்பாணம், வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் சிக்குண்டுள்ள 21 ஆலயங்களில் 7 ஆலயங்களைத் தரிசிப்பதற்கு பாதுகாப்புத் தரப்பினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் தலைமையில் கடந்த மாதம் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் காணி விடுவிப்புத் தொடர்பில் பேசப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இது தொடர்பில் கடந்த 14ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் மற்றும் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர், மாவட்டச் செயலக அதிகாரிகள், தெல்லிப்பழை பிரதேச செயலர், யாழ்ப்பாணம் மாவட்ட இராணுவத் தளபதி ஆகியோருக்கு இடையில் யாழ்ப்பாணம் மாவட்ட இராணுவத் தளபதியின் அலுவலகத்தில் கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளது. இதன்போதே ஏழு ஆலயங்களில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு அனுமதிப்பது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள பலாலி வடக்கு ஜே/254 கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள இராஜேஸ்வரி அம்மன் கோவில், நாகதம்பிரான் அம்மன் கோவில், ஜே/238 கிராம அலுவலர் பிரிவில் உள்ள முத்துமாரி அம்மன் கோவில், ஜே/245 வயாவிளான் மேற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள மனாம்பிராய் பிள்ளையார் கோவில், சிவன் கோவில், நாகதம்பிரான் கோவில், சக்தியுடையாள் அம்மன் கோவில் ஆகிய ஏழு ஆலயங்களில் வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொள்பவர்களின் பெயர் விவரங்கள், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம் என்பனவற்றை ஆலய நிர்வாகத்தினர் மாவட்ட செயலகத்திடமும், அதன் பிரதியை தெல்லிப்பழை பிரதேச செயலகத்திலும் ஒப்படைக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வழிபாடுகளை மேற்கொள்வதற்கான போக்குவரத்து ஏற்பாடுகள் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படவுள்ளன.

(அ-ம-125-26)

## நல்லூர்க் கந்தன் திருமண சேவை


எம்மிடம் எல்லா மதத்தவர்கள் எல்லா இனத்தவர்கள் செய்வாய்க் குற்றம், குற்றம் இல்லாதது சூரிய, செவ்.குற்றம், குற்றம் இல்லாத அரச, அரசசார்பற்ற, டொக்ரர், இஞ்சினியர், R.C வேத மணமகன்கள் மணமகள்கள் உள்நாடு, வெளிநாடு சகல மணமக்களுக்கும் எம்மிடம் மணமக்கள் உண்டு. விரைவாக உடனுக்குடன் மணமக்கள் தரமுடியும்

1. ஆண் V 1979 லண்டன். இந்தியா வருவார் சூரிய, செவ்- 6ம், கிரகபாவம் 18 1/2 மணமகள் தேவை
2. ஆண் V 1994 7ல் செவ் B Sc மாஸ்ரர் பூனர்பூசம் உத்தியோக மணமகள் தேவை
3. பெண் K.V கலப்பு B Sc டெவலப்மென்ற் ஒவ்விசர் 1992 ஆயில்யம் அரச மணமகன் தேவை

**வி. ஜெயந்தி: 077 973 3183**

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் . 10 . 06 . 1971



மறைவு . 10 . 01 . 2024

கடந்த 10.01.2024 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குலதெய்வம்

### அமரர் பொன்னையா ஸ்ரீபவன்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 09.02.2024 வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் நடைபெற்றது. அன்னாரின் நினைவாக இன்று (18.02.2024) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிறுவிளான்
இளவாலை

குடும்பத்தினர்.

(CS 54011) V-1

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர் பட்டப்படிப்புகள் பீடம்
## புதிய அனுமதிகள்

1. சைவசித்தாந்தத்தில் முதுமாணி (Master of Saiva Siddhanta) 2024/25 (அணி VIII)
2. பண்பாட்டியலில் முதுமாணி (Master of Cultural Studies) 2023/24 (அணி V)

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்களை உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் வலைத்தளத்தில் (www.grad.jfn.ac.lk) பார்வையிடலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி 29.03.2024
மேலதிக தொடர்புகளுக்கு 0212223608

குறிப்பு : பண்பாட்டியலில் முதுமாணி (அணி V) கற்கை நெறிக்கு ஏற்கனவே விண்ணப்பித்திருக்கும் விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

பதிவாளர்
15.02.2024.

(CR 41826) A

## UNIVERSITY OF JAFFNA
## INVITATION FOR BIDS

### Provision of a Private Security Service For the University of Jaffna-2024/2025

1. The Chairman, Department Procurement Committee of University of Jaffna invites sealed Bids from eligible and qualified bidder for Provision of a Private Security Service for the University of Jaffna.
2. Period of contract shall be a calendar year days subject to a performance evaluation period of 90 days from the start date.
3. Companies/ Firms which satisfy the following conditions are eligible to submit Bids. Documentary evidences should be provided with Bids.
   - 3.1 To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have its registered office or sub office in Northern Province (closer to main premises) and shall possess the valid registration in the Ministry of Defence, Public Security, Law and Order, Business registration and a copy of the valid registration certificate in Sri Lanka under the Company's Acts or Business Name Registration Ordinance should be attached with the Bid.
   - 3.2 Average of annual volume of security service contracts performed in the last 3 years should be at least **Rs. 75 Million**
   - 3.3 Must have satisfactorily carried out at least one Security service contract to a Government Department/ Corporation/University during the last 3 years for not less than **Rs. 25.0 Million.**
4. The Company/ Firm must have satisfactorily carried out at least two security service contracts which included a minimum work force of **175 security staff** in each contract for any Government Department/ Corporation/ University or Institutions over the last three years. Certified copies of letters issued by such clients should be attached with the Bid.
5. Interested Bidders may inspect the Bidding documents and obtain further information from the Assistant Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely from 9.00 a.m. to 2.30 p.m. on any working day.
6. A complete set of Bidding Documents in English Language could be purchased by interested Bidders on submission of a written application to the Assistant Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely from 9.00 a.m. to 2.30 p.m. on any working day up to **5th March 2024** upon the submission of receipt for the payment of non-refundable Tender Fee of Rs. **5000.00.** The payment should be made in cash to the Shroff, University of Jaffna or the payment shall be deposited in favour of Bursar, University of Jaffna at the **University of Jaffna Branch People's Bank Account Number 970000060000276** at any Branch of People's Bank.
7. Duly completed sealed Bids shall be sent either by registered post to Chairman, Department Procurement Committee, University of Jaffna or deposited in the Tender Box maintained at Registrar's office on or before 2.00 p.m. **on 12th March 2024.** Late Bids or incomplete Bids will be rejected.
8. Bids will be opened soon after closing time in the presence of the Bidders or their representatives who choose to attend.
9. All Bids shall be accompanied by a Bid Security (Unconditional Guarantee) of Rupees Four hundred thousand only **(Rs. 400,000.00).** (Valid up to 09th July 2024)
10. Pre-bid meeting will be held at **10.00 am on 01st March 2024** in the board room of the University of Jaffna, Thirunelvely.

The Chairman/ Department Procurement Committee
University of Jaffna,
Thirunelvely,
Jaffna.
17.02.2024

(CR 41827) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம், பெப்.17
வட்டுக்கோட்டைச் சந்திக்கு அருகில் இரு முச்சக்கரவண்டிகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. நேற்றுமுன்தினம் காலை நடந்த விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதிவேகம் காரணமாக இந்த விபத்து நடந்துள்ளது என்று கூறப்படுகின்றது. இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-27)

# காடுகளைத் துப்புரவாக்குமாறு மக்கள் கோரிக்கை

தேவிபுரம் பாடசாலைச் சூழலில் உள்ள காடுகளை துப்புரவு செய்வதற்கு புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
பாடசாலையை மூன்று பக்கங்களும் காடுகள் சூழ்ந்திருப்பதன் காரணமாக பாம்புகள் பாடசாலையை நோக்கி அடிக்கடி வருவதாகவும் பன்றிகளின் நடமாட்டம் கூடுதலாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் சமூக விரோதச் செயற்பாடுகள் இடம் பெறுவதாகவும் பாடசாலைக்கு அருகில் மதுப்போத்தல்கள், பியர்ரின்கள் நிறைந்து காணப்படுவதாகவும் பொது மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். ஆதலால், சமூகச் சீர்கேடுகளில் இருந்தும் இதர ஆபத்துகளில் இருந்தும் மாணவர்களைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-13)

**வீடு வாடகைக்கு தேவை**
நல்லூர், கச்சேரி, அரியாலை,
திருநெல்வேலி, கல்வியங்காடு,
கொக்குவில் மற்றும் இதனை அண்மித்த
பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவை.
076 437 5404

# காணி விலையேற்றம் விரைவில் தளர்வுறும்

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு



கொழும்பு, பெப். 17
நாட்டின் அபிவிருத்திக்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்களுக்கமைய காணிகளின் விலைகள் கணிசமாகக் குறைவடையும் என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், காணிகளுக்கு செயற்கையான முறையில் விலை அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது. அரசாங்கம் தற்போது முதலீட்டு நோக்கங்களுக்காகக் காணிகளை நன்கொடையளித்தல் மற்றும் நீண்ட காலக் குத்தகைக்கு வழங்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது. அத்துடன் அரசாங்கத்தின் 'உரித்து' வேலைத்திட்டத்தின் கீழ், பெரும்பாலானவர்களுக்குக் காணி தொடர்பான பிரச்சினைகள் நீங்கும். அதேவேளை அரசாங்க பெருந்தோட்ட நிறுவனங்களுக்குச் சொந்தமான பயன்படுத்தப்படாத காணிகளையும் ஏற்றுமதியை மையமாகக் கொண்டு முதலீட்டாளர்களுக்கு நீண்டகால அடிப்படையில் குத்தகைக்கு விடப்படவுள்ளது என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

**கண்ணீர் அஞ்சலி**
யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும்
திருமதி சி.நிவேதிகா
அவர்களின் அன்புத் தாய்
**பிரேமாவதி அமிர்தராசா**
அவர்கள் காலமானதையிட்டு, துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (CS 27928) S-1
**தாதியர் நலன்புரி சங்கம்,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

# சீருடை, பாடப்புத்தகம் செலவு ரூ.19 பில்லியன்

கொழும்பு, பெப். 17
பாடசாலை மாணவர்களது சீருடை மற்றும் பாடப்புத்தகங்களை வழங்குவதற்கு அரசாங்கம் 19 பில்லியன் ரூபாவை செலவிடுகின்றது என்று கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.
"அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும் பாடசாலைச் சீருடை மற்றும் பாடப்புத்தகங்கள் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
பாடசாலைச் சீருடையில் 80 சதவீதம் சீன அரசாங்கத்தின் அன்பளிப்பிலும் எஞ்சிய 20 சதவீதம் இலங்கை அரசாங்கத்தின் செலவிலும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.
இந்தியக் கடன் உதவியில் கிடைத்த கடதாசியை கொண்டு பாடப்புத்தகங்கள் அச்சிடப்பட்டன. அதனால் உரிய தினத்தில் பாடப்புத்தகங்களை அரசாங்கத்தால் வழங்க முடிந்துள்ளது" என்றும் கல்வி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

**மரண அறிவித்தல்**



மண்ணில் 08 . 01 . 1944
விண்ணில் 12 . 02 . 2024

**கிருஸ்ணசாமி சிவஞானம்**

கொழும்பைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வதிவிடமாகவும், கூழாவடி, ஆனைக்கோட்டையினைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணசாமி சிவஞானம் அவர்கள் கடந்த (12.02.2024) திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணசாமி - லெட்சுமியம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான துரைராஜா-சின்னமணி தம்பதியரின் அன்பு மருமகனும், ஸ்ரீஇராஜேஸ்வரியின் ஆருயிர்க் கணவரும், சதீஸ், தர்சன் ஆகியோரின் அருமைத் தந்தையும், தயாபரி, வினுஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், சத்தியா, ரிஷிகா, நிலா, சச்சின் ஆகியோரின் அன்புப் பேரனும், மகேஸ்வரி, பகவதி, சோமசேகரம்,பிரகலேஸ்வரி, காலஞ்சென்ற விமலேஸ்வரி மற்றும் சிவஞானேஸ்வரி, யோகசுந்தரம், இராஜேஸ்வரி, தெய்வேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசு.சுந்தரம், திலகா, அன்னலிங்கம், சிவப்பிரகாசம், கார்த்திகேயன், கார்மேகம், நகுலேஸ்வரி, காலஞ்சென்றவர்களான ஸ்ரீஸ்கந்தராசா, ஸ்ரீஇலங்கராசா மற்றும் ஸ்ரீகமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.02.2024) ஞயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைக்கோட்டை காக்கை தீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

**கூழாவடி,**
**ஆனைக்கோட்டை**
(CS/54008) J-1
**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 450 2183**

# உயர்கல்வியில் முதலீடு; முன்வருகிறது பிரிட்டன்



கொழும்பு, பெப். 17
பிரித்தானியாவின் தொழில் முயற்சியாளர்கள் இலங்கையின் உயர்கல்வித் துறையில் முதலீடு செய்வதற்கு ஆர்வமாக உள்ளனர் என்று ஐக்கிய இராச்சியத்துக்கான இலங்கைத் தூதுவர் ரோஹித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.
லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் பொதுநலவாய நிறுவனம் மற்றும் முதலீட்டுச்சபையுடனான கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றது. இந்த மாநாடு குறித்து கருத்து வெளியிட்ட தூதுவர் போகொல்லாகம,
முதலீட்டாளர்கள் சிலர், இலங்கையில் டிஜிற்றல் பல்கலைக்கழகம் ஒன்றை அமைப்பதற்கான யோசனைகளையும் முன்வைத்தனர். குறிப்பாக கொழும்புத் துறைமுக நகரத்தில் செயற்கை நுண்ணறிவு மையத்தை அமைப்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம உரிமைக்காகவே இலவச பாடநூல்

யாழ்ப்பாணம், பெப்.17

நாளாவிய ரீதியில் எல்லா மாணவர்களும் சம உரிமையுடன் பாரபட்சமின்றி வாழக்கூடிய வகையில் இலவச பாடநூல் மற்றும் இலவச சீருடை ஆகிய இரண்டையும் கல்வி அமைச்சு எமக்கு வழங்கியுள்ளது என தென்மராட்சி வலயக்கல்வி ஆரம்ப உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சி கல்வி வலயத்தால் கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இலவச பாடநூல் மற்றும் இலவச சீருடைத்துணி வழங்கும் நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாம் விலைக்கு வாங்கிப் படிக்கும் புத்தகங்களை எவ்வளவு பாதுகாப்பாகவும் நேர்த்தியாகவும் வைத்திருக்கிறோமோ, அதற்கு மேலாகப் பல்வேறுபட்ட விடயங்களைக் கொண்டிருக்கின்ற இந்த இலவச பாட நூல் ஒவ்வொரு மாணவனதும் எதிர்கால கல்வி அடைவு மட்டத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காக அப்பாட நூல்களை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். அதனூடாக சிறந்த சமநிலை, ஆளுமை படைத்த ஒரு மாணவ சமுதாயத்தை உருவாக்கக் கூடிய வகையில் அனைவரும் திகழவேண்டும் - என்றார். (ப-159)

தொழிற்சங்க நடவடிக்கைகளை

# அவசரகால நிலையின் கீழ் தடைசெய்ய வேண்டும்!

யாழ். போதனா மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப். 17

**தொடர்ச்சியாக தொழிற்சங்க நடவடிக்கைகள் நடைபெற்றால் அவசரகால நிலையின் கீழ் தொழிற்சங்க நடவடிக்கைகளை குறிப்பிட்ட காலத்துக்குத் தடை செய்யவேண்டும் என யாழ். போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் யமுனானந்தா தெரிவித்தார்.**

அவர் வெளியிட்டுள்ள ஊடகக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த கால அனுபவங்கள் எம்மை இலங்கையில் ஐக்கியத்துடன் வாழ்வதற்கான வழியைக் கற்றுத் தந்துள்ளன. அதனை நாம் புரிந்து எமது சமூகத்தை வழிநடத்த வேண்டிய தேவை உள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் ஜனாதிபதித் தேர்தலையோ அல்லது நாடாளுமன்றத் தேர்தலையோ நடத்தினால் இலங்கையில் இனரீதியான முரண்பாடு அரசியல்வாதிகளால் உருவாக்கப்படும். மாறாக மாகாணசபைத் தேர்தலை நடத்தினால் பிரதேச ஒருமைப்பாடு பேணப்படும். மாகாணசபைத் தேர்தலுக்குப் பின்னர் நாடாளுமன்றத் தேர்தலையும் அதன் பின்னர் ஜனாதிபதித் தேர்தலையும் நடத்தினால் இனரீதியான அரசியல் பரப்புரை அதிகளவில் நடைபெறாது.

பொருளாதாரம் நலிவடைந்த நிலையில் தேர்தல்களை எதிர்கொள்ளும்போது எதிர்த் தரப்பு அரசியல்வாதிகள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட ஊக்குவிப்பார்கள். இதை ஒருவித பயங்கரவாதச் செயலாகக் கருத வேண்டும் - என்றார். (ஓ-125)

## விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், பெப்.17

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் 2024 ஆம் ஆண்டுக்குரிய கலைக்குரிசில் விருது, இளம் கலைஞர் விருது, சிறந்த நூற்பரிசுத் தெரிவு, நடுவர் தெரிவு ஆகியவற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப்படிவங்களை வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பப் படிவங்களை மார்ச் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்பாக பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (ப)

## ஏல விற்பனைக்கூடமாக மாறிவிட்டது இலங்கை

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சாடல்



கொழும்பு, பெப். 17

அரசாங்கம், இலங்கையை தேசியச்சொத்துகளை விற்பனை செய்யும் ஏல விற்பனைக்கூடமாக மாற்றியுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜிந்தோட்டை பிளைவூட் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 17 ஏக்கர் நிலத்தை அரசாங்கம் 82 இலட்சத்துக்கு விற்பனை செய்துள்ளது. இந்தக்காணியை வாங்கியவர் காணியைத் துண்டு போட்டு ஏலத்தில் விற்பனை செய்துள்ளார்.

இந்தக்காணி தொடர்பில் நாடாளுமன்ற விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கையிலேயே இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. நாட்டை ஏல விற்பனைக்கூடமாக மாற்றும் அரசாங்கத்தின் திட்டத்துக்கு எதிராக நாட்டு மக்கள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து கொள்ள வேண்டும்-என்றார். (ஓ-6)

## இந்திய அரசாங்கத்தால் குளிர்சாதனப் பெட்டி

மன்னார், பெப்.17

மன்னார் மாவட்டத்திலுள்ள நான்கு கடற்றொழில் சமாசங்களுக்கு, கடலுணவுகளைக் கெடாமல் பாதுகாக்கும் குளிர்சாதனப்பெட்டிகள் இந்திய அரசால் மன்னார் மாவட்டச் செயலகத்தில் வைத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை கையளிக்கப்பட்டன.

மாவட்டச் செயலர் க. கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் எச்.இ.சந்தோஷ் ஜா, துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ப-9)

## ஒட்டுசுட்டான் வீதிகளை செப்பனிட்டுத் தாருங்கள்

முல்லைத்தீவு, பெப். 17

ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள உள்ளூர்ப் பாதைகளை செப்பனிட்டுத் தருமாறு அந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த பெருமழையால் இங்குள்ள உள்ளூர்ப் பாதைகள் அனைத்தும் சேதமடைந்துள்ளன. கற்சிலைமடுவிலிருந்து முத்துஐயன்கட்டு செல்லும் பிரதான வீதி மற்றும் முத்துஐயன்கட்டு டி2 வாய்க்கால் வீதி என்பன பயணிக்க முடியாதவாறு ஆபத்தானதாக மாறியுள்ளன. உரிய அதிகாரிகள் இந்த வீதிகளை சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என் மக்கள் கோருகின்றனர். (ச-500)

## பேருந்துச் சேவைகளை நடத்துமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, பெப்.17

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாடசாலை நேரங்களில் பேருந்துகள் பயணிக்காததால் மாணவர்கள் பெரும் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

திருமுறிகண்டி, பணிக்கன்குளம், கிழவன்குளம், அம்பகாமம் கிராமங்களிலிருந்து மாங்குளம் மகா வித்தியாலயத்துக்கும் தேவிபுரம் கிராமத்திலிருந்து உடையார்கட்டு மகா வித்தியாலயத்துக்கும், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கும், தண்ணிமுறிப்பு ஆறுமுகத்தான் கிராமத்திலிருந்து குமுழமுனை மகா வித்தியாலயத்துக்கும் மாணவர்கள் சென்று வருவதில் நெருக்கடி நிலைமை காணப்படுகின்றது.

இதனால் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் மாணவர்களுக்காக பேருந்துச் சேவைகளை நடத்தவேண்டும் என்ற தீர்மானங்கள் பல தடவைகள் எடுக்கப்பட்டும் இலங்கை போக்குவரத்துச் சபையோ தனியார் போக்குவரத்துச் சங்கமோ இதுவரை மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று வரக்கூடிய வகையில் பேருந்துச் சேவைகளைப் பல கிராமங்களுக்கு மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ப)



## மாணவர்களுக்கு உணவூட்ட அமெரிக்காவால் நிதியுதவி!

கொழும்பு, பெப். 17

இரண்டு இலட்சம் மாணவர்களுக்கு, ஐந்து வருடத்துக்கு சத்துணவு வழங்குவதற்கென அமெரிக்கா 32.5 மில்லியன் டொலரை சிறுவர் பாதுகாப்பு நிலையத்தினூடாக அண்மையில் வழங்கியுள்ளது. நிகழ்வில் கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஓ)

## ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்துதாருங்கள்

அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் மாந்தை கிழக்கு மக்கள் கோரிக்கை

பாண்டியன்குளம் பாடசாலையின் உயர்தர வகுப்புப் பாடங்களுக்குரிய ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர். அதை உடனடியாக நிவர்த்தி செய்து தாருங்கள் - இவ்வாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாந்தை கிழக்கு பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டம் மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்தில் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

விவசாயம், காணி, வனவளத் திணைக்களம் தொடர்பான விடயங்கள், நன்னீர் மீன்பிடி தொடர்பான பிரச்சினைகள் முதன்மையாகக் கலந்துரையாடப்பட்டு சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. மாந்தை கிழக்கு பூவரசங்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையை மீள இயங்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு நடவடிக்கை எடுப்பதாக ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் தெரிவித்தார். (ஓ-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியத்...

இந்தியத் திட்டத்தில் முன்னெடுக்கப்பட வுள்ள புதுப்பிக்கத்தக்க மின்திட்டப் பகுதி களையும் பார்வையிட்டு ஆராய்ந்தார். அதனைத் தொடர்ந்து காங்கேசன்துறைத் துறைமுகம், பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றுக்கும் சென்று அங்குள்ள நிலைமைகளையும் ஆராய்ந்தார்.

மன்னாருக்கும் நேற்றுப் பயணித்த இந்தியத்தூதுவர், அங்கு ராமர் பாலத்துக்குச் சென்று இந்திய - இலங்கை இடையிலான நல்லுறவுக்காக வழிபாடுகளில் ஈடுபட்டார். அத்துடன் திருக்கேதீச்சரத்தையும் வழிபாட்டார். குறித்த விஜயத்தில் யாழ். இந்தியத் துணைத்தூதரக அதிகாரி கொன்சியூலர் ஜெனரல் ராகேஷ் நடராஜ், ஜெ. பாஸ்கரன் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் உடனிருந்தனர். (அ-ம-66-26-27)

## பத்துவயதுச்...

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

தரம் -5 இல் கற்கும் குறித்த சிறுமியின் பெற்றோர் தொழில் நிமித்தம் புத்தளத்தில் தங்கியிருப்பதால் தனது பேர்த்தியாருடனேயே சிறுமி வசித்து வந்துள்ளார். தினமும் இரவு வேளையில் பெற்றோருடன் தொலைபேசியில் உரையாடுவதையும், அருகிலுள்ள இன்னொரு வீட்டுக்குச் சென்று தொலைக்காட்சி பார்ப்பதையும் சிறுமி வழக்கமாகக் கொண்டிருந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் அலைபேசிக்கு சார்ஜ் போடுவதற்காக பேர்த்தியாரின் வீட்டிலிருந்து 30 மீற்றர் தொலைவிலுள்ள மாமாவின் வீட்டுக்குச்சென்றுள்ளார். அங்கு தொலைபேசியை சார்ஜில் போட்டுவிட்டு வழக்கமாகத் தொலைக்காட்சி பார்க்கும் வீடு இருக்கும் பக்கம்நோக்கி சிறுமி சென்றுள்ளார். இந்த நிலையில், அருகிலுள்ள தென்னந்தோப்பு ஒன்றில் காவலாளியாகக் கடமையாற்றும் 48 வயதான ஒருவர் சிறுமியின் வீட்டுக்கு வந்து அவ்வப்போது உணவருந்திச் செல்வார். நேற்றுமுன்தினமும் அவர் உணவருந்திவிட்டு சிறுமி மாமா வீட்டுக்குச் சென்ற சில நிமிடங்களிலேயே அவர் சிறுமி சென்ற பாதையூடாகச் சென்றுள்ளார். இது இந்த இரு வீடுகளுக்கும் இடையே உள்ள இன்னொரு வீட்டில் பாதுகாப்புக் கமராவில் பதிவாகியுள்ளது.

தொலைபேசிக்குச் சார்ஜ் போடச்சென்ற சிறுமி நீண்டநேரமாகியும் திரும்பி வராததைக் கண்ணுற்ற பேர்த்தியார் உடனடியாக மாமா வீட்டுக்குச் சென்று விசாரித்துள்ளார். அவர்கள் சிறுமி தொலைக்காட்சி பார்க்கும் வீட்டுக்குச் சென்றுவிட்டார் எனக் கூறியுள்ளனர். ஆனால், அங்கும் சிறுமி இருக்கவில்லை. இதனால் பயந்துபோன பேர்த்தியாரும் உறவினர்களும் இரவிரவாக ஊர்முழுவதும் சிறுமியைத் தேடியுள்ளனர். இதன்போதே சிறுமி சென்ற பின்னர் அதே பாதையில் தென்னந்தோப்பின் காவலாளி சென்ற சி.சி.ரி.வி. காட்சியை அவதானித்து அவர் மீது சந்தேகம் கொண்டுள்ளனர். உடனடியாகவே ஊர் இளைஞர்கள் ஒன்றுகூடி குறித்த காவலாளியைப் பிடித்து, ஊரிலுள்ள தேவாலய பங்குத்தந்தையிடம் ஒப்படைத்தனர். பின்னர் இதுகுறித்து தலைமன்னார் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அவர்கள் காவலாளியை சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்தனர்.

இந்த நிலையில் நேற்றுக்காலை குறித்த தென்னந்தோப்பில் வேலி ஓரமாக சிறுமியின் உயிரற்ற சடலம் ஊரவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்றும், அவர் போதைக்கு அடிமையான காரணத்தால் அவருடைய மனைவி சில தினங்களுக்கு முன்னர் அவரைப் பிரிந்து சென்றுள்ளார் என்றும் தமது முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமியின் சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (அ-ம-213-66)

## போதைப்பொருள்...

கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே, கடந்த டிசெம்பர் மாதம் முதல் தற்போது வரையிலான தரவுகளின் அடிப்படையில் இந்தத் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டன.

இதன்படி இந்தக் காலப்பகுதிக்குள், யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் போதைப் பொருள் தொடர்பில் 99 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் ஹெரோய்ன் போதைப்பொருள் தொடர்பில் 53 வழக்குகளும், ஐஸ் போதைப் பொருள் தொடர்பில் 13 வழக்குகளும், கஞ்சா தொடர்பில் 15 வழக்குகளும், மாவா மற்றும் போதை மாத்திரைகள் தொடர்பில் 18 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இவற்றைவிட, சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவில் கஞ்சா தொடர்பாக 18 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவில் கஞ்சா தொடர்பாக 9 வழக்குகளும், போதை மாத்திரை தொடர்பாக ஒரு வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸ் பிரிவில் ஹெரோய்ன் தொடர்பாக 10 வழக்குகளும், ஐஸ் போதைப் பொருள் தொடர்பாக ஒரு வழக்கும், கஞ்சா தொடர்பாக 13 வழக்குகளும், போதைமாத்திரை மற்றும் மாவா தொடர்பாக 6 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மானிப்பாய் பொலிஸ் பிரிவில் ஹெரோய்ன் தொடர்பாக 8 வழக்குகளும், கஞ்சா தொடர்பாக 16 வழக்குகளும், போதை மாத்திரை மற்றும் மாவா தொடர்பாக 32 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கோப்பாய் பொலிஸ் பிரிவில் ஹெரோய்ன் தொடர்பாக 3 வழக்குகளும், கஞ்சா தொடர்பாக 8 வழக்குகளும், போதை மாத்திரை மற்றும் மாவா தொடர்பாக 8 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கொடிகாமம் பொலிஸ் பிரிவில் ஹெரோய்ன் தொடர்பாக 2 வழக்குகளும், ஐஸ் தொடர்பாக ஒரு வழக்கும், கஞ்சா தொடர்பாக 13 வழக்குகளும், போதைமாத்திரை மற்றும் மாவா தொடர்பாக 2 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவில் ஹெரோய்ன் தொடர்பாக 3 வழக்குகளும், கஞ்சா தொடர்பாக 8 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நெடுந்தீவு பொலிஸ் பிரிவில் கஞ்சா தொடர்பாக 2 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன - என்று சுட்டிக்காட்டப்பட்டது. (அ-ம-26-125)

## இந்தியா...

கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஐந்து நாட்கள் பயணம் மேற்கொண்டு அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் குழு டில்லி சென்றிருந்தது. இந்திய வெளிவிவகார அமைச்சர், வெளிவிவகார அமைச்சின் செயலாளர், இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோருடன் தேசிய மக்கள் சக்தியினர் சந்திப்புகளை நடத்தினர். இந்தப் பயணம் தொடர்பில் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே, இந்தியா 13ஆவது திருத்தம் தொடர்பில் எவ்வும் பேசவில்லை என்ற விடயத்தை அநுர பகிரங்கப்படுத்தியுள்ளார்.

அநுர மேலும் தெரிவித்ததாவது:-

"இந்தியப் பயணத்தின்போது உண்மையில் 13 ஆவது திருத்தம் தொடர்பில் அவதானமே செலுத்தப்படவில்லை. இதுபற்றிப் பேசப்படாமை எமக்கும் வியப்பாக இருந்தது. எனினும், ஒரேயொரு சந்தர்ப்பத்தின்போது தமிழ், முஸ்லிம் மக்களின் ஒத்துழைப்பைப் பெறவுள்ள உங்களிடமுள்ள வேலைத்திட்டம் என்னவென்று குழுவொன்றினால் எம்மிடம் கேட்கப்பட்டது. அதற்கு நாம் பதில் வழங்கினோம். 2005 இல் தமிழர்களுக்கு எதிராகவே மஹிந்த ஆட்சிக்கு வந்தார். தமிழர்கள் தோற்றுவிட்டனர் எனக்கூறி 2010 இல் மீண்டும் ஆட்சிக்கு வந்தார். 2019 இல் முஸ்லிம் மக்களுக்கு எதிராக கோத்தாபய ராஜபக்ச ஆட்சிக்கு வந்தார். மற்றைய தரப்புக்கு எதிராகவும், அவர்களுக்கு வலியை ஏற்படுத்தியுமே ஆட்சிக்கு வருகின்றனர். நாம் இந்த அணுகுமுறையைப் பின்பற்றும் கட்சி அல்ல. அனைவரையும் இணைத்துக்கொண்டு இந்த ஆட்சியை விரட்டவே எதிர்பார்க்கின்றோம். எமது ஆட்சியில் வடக்கு - கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எம்.பி.க்களும் எமது அமைச்சரவையில் இடம்பெற வேண்டும் என்ற நோக்கில்தான் செயற்பட்டுவருகின்றோம். அவர்களின் வழி பிரித்தானது. எமது வழி இணைந்து பயணிப்பது எனக் கூறினோம்" - என்றார். (அ-ம-44)

## குடும்பத்தலைவர்...

டுள்ளார். குடும்பத்துக்குள் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தையடுத்து, அவர் தவறான முடிவெடுத்து கிணற்றுக்குள் குதித்தார் என்றும், அவரை மீட்பதற்காக குடும்பத்தினர் அயலில் உள்ளவர்களை வரவழைத்து முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அவர் உயிரிழந்துவிட்டார் என்றும் பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-110-18)

## காணிகளை...

கட்டுவன் மேற்கு ஜே/239, குப்பிளான் வடக்கு ஜே/211 ஆகிய பகுதிகளில் உள்ள காணிகள் விமான நிலைய விஸ்தரிப்புக்காக அளவீடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படும் நிலையில், அது தொடர்பில் நேற்று நடைபெற்ற யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கேள்வி எழுப்பினார். இதன்போதே, சுவீகரிப்பதற்காக காணிகள் அளவீடு செய்யப்படவில்லை என்ற தகவலை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் தெரிவித்தார்.

வலி. வடக்கில் மேற்படி பகுதிகளில் இடம்பெற்ற காணி அளவீடுகள் சுவீகரிப்புக்காக மேற்கொள்ளப்படவில்லை. மதிப்பீட்டு அறிக்கைக்காகவே இந்த அளவீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்தார்.

இதையடுத்துக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், மதிப்பீட்டுப் பணிகளுக்காகத்தான் சுவீகரிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றால் அது தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டியது மாவட்ட மற்றும் பிரதேச செயலக அதிகாரிகளின் பொறுப்பு. அத்துடன் எக்காரணத்தைக் கொண்டும் விமான நிலையத்துக்குத் தெற்கே மக்கள் குடியேறியுள்ள காணிகளை விமான நிலையத்துக்காகச் சுவீகரிப்பதற்கு அனுமதிக்கமாட்டோம் - என்றார். (அ-ம-26-125)

## 90 பேருக்கு...

இதன்போது காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட அடுத்தகட்ட நடவடிக்கைகளையடுத்தே 90 பேருக்கு இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளன என்று நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் நேற்று வெளியிடப்பட்டுள்ள முன்னாயத்த அறிக்கையில், ஆயிரத்து 788 பேர் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் காணாமற்போயுள்ளனர் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது. அவர்களில் ஆயிரத்து 289 பேருக்கான இழப்பீடுகளுக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. அவர்களில் 90 விண்ணப்பங்களுக்கான இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 388 விண்ணப்பங்களுக்கான இழப்பீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-ம-26-125)

## சஜித்...

பொன்சேகா வெளிப்படையாக விமர்சித்துவரும் நிலையிலேயே இந்தமுடிவு எடுக்கப்பட்டுள்ளது. தவிசாளர் பதவியில் இருந்து பொன்சேகாவை நீக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் பலரும் கட்சித் தலைவரிடம் முன்வைத்த தொடர்ச்சியான கோரிக்கைகளும் இந்த முடிவு எடுக்கப்படுகின்றமைக்கு பிரதான மான காரணம் என்று சொல்லப்படுகின்றது.

சஜித்துக்கும் பொன்சேகாவுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டிருந்த நிலையில், முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்னாயக்கவை ஐக்கிய மக்கள் சக்தியில் இணைத்துக்கொண்டதையடுத்து பிரச்சினை உக்கிரமடைந்து விடயம் பொது வெளிக்கு வந்தது. எனினும், கட்சியை விட்டு வெளியேறும் திட்டம் இல்லை என்று பொன்சேகா கூறியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## சிறுமிக்கு...

முன்னெடுக்கப்பட்டது. மன்னார் புனித லோறன்ஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள், மாணவர்களின் பெற்றோர், சிவில் சமூகத்தினர், இளைஞர்கள் எனப் பல தரப்பினரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். (அ-ம-213-66)

காணவில்லை

ஜேர்மன் செபெட் இனமுடைய, மேற்பக்கம் கறுப்பு மற்றும் கீழ்ப் பக்கம் பிறவுண் நிறமுடைய பொலிஸ் டோக் (Police dog) என்ற பட்டி அணிந்த பெரிய இன நாய். நேற்று இரவு 10.00 மணி முதல் காணவில்லை

பிள்ளையார் கோவிலடி சுதுமலை மானிப்பாய் வீதி. தாவடியில் காணவில்லை. கண்டு பிடித்துக் கொடுப்பவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
077 991 1025, 076 602 7624

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டுயானை தாக்கி ஒருவருக்குக் காயம்

முல்லை. பெப். 17

முல்லைத்தீவு மாவட்டத்தில் காட்டுயானையால் தாக்கப்பட்ட ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். வெலிஓயாப் பிரதேசத்தில் வயல் காவலுக்குச் சென்ற குடும்பத்தலைவர் கடந்த திங்கட்கிழமை காட்டுயானைத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். காலொன்று முறிவடைந்த நிலையில் மீட்கப்பட்ட அவர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தற்போது சேர்க்கப்பட்டுள்ளார்.

(ம-19)



## காணி விற்பனைக்கு

இராசபாதை வீதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

077 986 5457

(CS / 27915)

## சில்வர் சீற் (SS) பயன்படுத்துவோர்க்கு



தாய்வானில் (Taiwan) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட சில்வர் சீற் 2mm (Stainless Steel Sheet) உணவு உற்பத்தி பயன்பாட்டிற்கு உகந்த (Food Grade) தரம் 304 அறவே துருப்பிடிக்காதது இப்பொழுது எம்மிடம்.

"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"

**ஆர்க். என். கம்பனி**

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். -021 222 4021
A-9 வீதி, எழுதுமட்டுவாள். -070 191 3571
A-9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். -021 228 2020

Hotline:071 535 7799/ 071 973 9917

(CS 54004) A

## வாகனம் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள TATA - 207 DI எனும் வாகனம் விற்பனைக்கு உண்டு.
உற்பத்தி வருடம் 2011
விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு: 075 042 7547

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Pleasure மோட்டார் சைக்கிள் 2. ஆண்களுக்கானதும், பெண்களுக்குமான. துவிச்சக்கரவண்டி. மற்றும் பாவித்த வீட்டுத்தளபாடங்கள். போன்றவை உடன் விற்பனைக்கு.

தொடர்பு:- 021 222 4436 881, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

கொக்குவில். குளப்பிட்டி - ஆனைக்கோட்டை வீதியில் கேணியடி ஒழுங்கையில் இருந்து 100m தூரத்தில் 3 பரப்பும் 3.75 குழியும் விற்பனைக்குண்டு.

077 443 4501

## மணமகள் தேவை

1985ம் ஆண்டில் பிறந்த (V) கனடா குடியுரிமையைக் கொண்ட (Canadian citizen) விவாகரத்துப் பெற்ற உதயச் செவ்வாய் மணமகனுக்கு மணமகள் தேவை.

075 538 9986

## காணி விற்பனைக்கு

புலோப்பளை, பளையில் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :-
076 564 7848

(CS/ 534001) J-2

## கணித ஆசிரியர் தேவை

'வைகுறோ' நிறுவனத்தில் தரம் 2 இற்கு கணிதம் கற்பிக்க பெண் ஆசிரியர் தேவை.

மானிப்பாய் வீதி, உடுவில்.

தொடர்பு: 077 711 2261

(CS 53975) (N-1)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் 33 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- A9 வீதி இரண்டாம் காணி
- குடியிருப்புகள் சூழ உள்ள பகுதி
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- தரகர் தேவை இல்லை
- 1 பரப்பின் விலை 200000/=

பார்வையிடும் நேரம் காலை 8.00 முதல் மாலை 6.00 வரை

தொடர்பு: 071 173 3911
076 853 5022

(CS/ 27923) J-1



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்

தோற்றம்
26 . 10 . 1929



மறைவு
18 . 01 . 2024

### திருமதி ஈஸ்வரபாதம் வசந்தரூபா

கடந்த 18.01.2024 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப குலவிளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (15.02.2024) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. இன்று (17.02.2024) சனிக்கிழமை எமது இல்லத்தில் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து பல வழிகளிலும் உதவி புரிந்த அன்பு நெஞ்சங்களுக்கும், தொலைபேசி ஊடாகவும், சமூக வலைத்தளங்களினூடாகவும் அனுதாபம் தெரிவித்த அன்பு நெஞ்சங்களுக்கும், பதாகைகள், துண்டுப்பிரசுரங்கள், வெளியிட்டவர்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், வீட்டிற்கு வருகை தந்து ஆறுதல் கூறிய அன்பு நெஞ்சங்களுக்கும், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்ற பொழுதெல்லாம் வைத்திய சிகிச்சைகளையும் பராமரிப்பினையும் வழங்கிய யாழ். போதனா மருத்துவமனை பணிப்பாளர், மருத்துவர்கள், தாதியர்கள், ஊழியர்கள், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.


ஈ.சரவணபவன் (மகன்)
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் (2010-2020)
உதயன் குழுமத் தலைவர்
T.P:071 411 5002, 071 411 5000

ஈஸ்வரபாதம் குடும்பத்தினர்.
105, இராஜ வீதி, கோப்பாய், யாழ்ப்பாணம்.

(CR 41828) A

## மரண அறிவித்தல்

தோற்றம்
21 . 02 . 1950



மறைவு
14 . 02 . 2024

### துரைராஜா அற்புதலிங்கம்

கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட துரைராஜா அற்புதலிங்கம் அவர்கள் கடந்த 14.02.2024 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராஜா மற்றும் இரத்தினம்மா (கனடா) தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஜெயசோதியின் அன்புக் கணவரும், பிரதீப் (பொறியியலாளர் - கொழும்பு), பிரசாந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சண்முகலிங்கம் (அமரர்), மகாலிங்கம் (கனடா), சிவலிங்கம் (அமரர்), பஞ்சலிங்கம் (அமரர்), சுந்தரலிங்கம் (கனடா), தவராணி (கனடா), நிர்மலா (கனடா), புவனேஸ்வரன் (கனடா), சிவனேஸ்வரன் (நோர்வே), ரோகினி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அன்னம்மா (மட்டக்களப்பு), கேதீஸ்வரி (கனடா), மாங்களேஸ்வரி, பிருந்தா (கனடா), அமிர்தலிங்கம் (அமரர்), தயாநிதி (கனடா), தயாகுலேஸ்வரி (கனடா), நவதீஸ்வரி (நோர்வே), சிவகுமார் (கனடா), சாரதாமணி, பாலலக்சுமி (அமரர்), கிருஷ்ணவேணி, சிறிஸ்கந்தராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜசிதா, ராஜ்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆதிரா ஆசி, அனாதிக்கா ஆசி, ஆருத்ரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (18.02.2024) முற்பகல் 09.00 மணிக்கு பொற்பதி வீதி, கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 734 0406

(CS 27929) S-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org